# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூ | - சில சங்ககால ஊர்ப்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள்

சு.நளினி,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி,

---

## முன்னுரை

பண்டை காலத்தில் வாழ்ந்த பல உயிரினங்களைப் பற்றியும் அவற்றின் கூர்ந்த மதியையும் தனக்கென வாழாமல் தன்னைச் சார்ந்த உயிர்களுக்காக வாழும் தன்மையையும் துணையின் துயர் துடைக்கும் பாங்கினையும், மக்களின் அக வாழ்விலும் புற வாழ்விலும் உயிரினங்கள் பற்றிய உண்மைகளை மிக நுட்பமாக அறிந்து அதனை பிறருக்கு தெரிவிக்கும் படியாக சங்க இலக்கியப் பதிவுகள் அமைந்துள்ளன என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பெண் யானையின் சமயோசித புத்தி

வாழையுண்ணச் சென்ற ஓர் ஆண் யானை கால் இடறி அருகிலுள்ள பெருங்குழியில் விழுந்து தத்தளித்தது. அதைக் கண்ட பெண் யானை அதனை வெளியேற்ற எண்ணிக் கரையிலுள்ள மரங்களை எல்லாம் உள்ளே ஒடித்துப் போட்டது. ஆண்யானை அதனைப் படியாகக் கொண்டு வெளியேறியது.

"கழைநரல் சிலம்பின் ஆங்கண்
வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில்
படு கடுங் களிற்றின் வருத்தம் சொலிய
பிடி படி முறுக்கிய பெருமரப் பூசல்
விண் தோய் விட கரத்து" (அகம்.8; 8-12)

என்ற பாடலின் மூலம் ஒரு குடும்பத்தில் தலைவன் துன்புற்று இருக்கும் போது தலைவி அவனைத் தேற்றுவது போன்ற குணம் யானைகளிடமும் காணப்படுகிறது. தலைவனுக்குத் துன்பம் நேர்கையில் தலைவி மனத்துணிவோடு செயல்பட்டு அத்துன்பத்திலிருந்து மீட்க வேண்டும் என்னும் வாழ்க்கை நெறி விலங்குகளின் மூலம் உணர்த்தப்படுகிறது.

## புலியின் உணவிலும் அறம்

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது பழமொழி தன் உணவுக்கு ஒரு யானையை அடித்து வீழ்த்தினாலும் அது இடது பக்கம் வீழ்ந்தால் உண்ணாது மறுநாள் ஒரு பெரிய யானையோடு போரிட்டு அதனை

வலப்பக்கத்தில் வீழ்த்தி அதனையே உணவாகக் கொள்கின்ற புலியின் பெரு முயற்சியினை,

"_____ ____ ____ இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தழ்வு இல் உள்ளம் தலைத் தலைச் சிறப்ப" (அகம். 29; 2-4)

புலி தான் தொடங்கிய செயலைக் கைவிடாதது. அறப்பசித்து உயிர் வருந்துவதாயினும் தான் வீழ்த்திய உணவு இடப்பக்கம் வீழ்ந்தால் உண்ணாது. மேலும் புலி தான் கொல்லும் விலங்குகள் வலப்பக்கமாக விழுந்தால் மட்டும் அதனை உண்ணுமாம் அதனைக் கருதியே புலவர்கள் வலம் படத் தொலைச்சி என்றும் இடம்படுபறியா வலம்படு வேட்டத்து வாள் வரி என்று கூறும் வழக்கம் தோன்றியுள்ளமை இதன் மூலம் அறியமுடிகிறது.

**யானையின் குடும்பப் பற்று**

மலைச் சாரலிடத்தே கன்று ஈன்று சில நாள் ஆன மெல்லிய நடையையுடைய இளைய பெண் யானைக்கும் அதன் கன்றுக்கும் பசியைப் போக்கும் பொருட்டு மூங்கிலின் முற்றாத முளையினைக் கொண்டு வந்து கொடுக்கும்.

"ஒடுங்கா எழில் வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினைத்
தீம் கண் கரும்பின் கழை வாங்கும் உற்றாரின்
நீங்கலம் என்பான் தலை" (கலி.40; 26-29)

முதற்கருவுற்ற காலத்து மகளிரிடம் தோன்றும் விருப்பம் போன்று பிடியிடம் விருப்பம் தோன்றியது. அதனைத் தீர்க்கும் பொருட்டு ஆண் யானை இளங் குருத்தினைக் கொணர்ந்து அதன் விருப்பத்தினை தீர்த்து வைத்தது என்ற செய்தியை கலிதொகை பாடலின் மூலம் அறியலாம்.

**மானின் அன்பு**

பாலை நிலத்திலுள்ள ஆண்மான் வெண்மையான பூவினைத் தான் உண்ணாது தன் துணை உண்பதற்காக மெலிந்து நீண்ட கால்களை உடைய பெண்மானை அழைக்கும்.

சுனையில் சிறிதளவு நீரே உள்ளது. பெண்மான் நிறைவான நீரைப்பருக வேண்டும் என ஆண்மான் நினைக்கிறது. தான் பருகாமல் பெண்மான் நீர் அருந்தாது என்பதனை ஆண்மான் நன்கு அறியும். எனவே தான் நீர் அருந்துவது போல் வாயை மட்டும் நீரில் வைத்துக் கொள்ளும் என்ற அகக் காட்சியினை,

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாது என்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர்" (ஐந்.ஐம்.38)

வெயிலின் கடுமையிலிருந்து தன் பிணையைக் காக்கும் பொருட்டு ஆண்மானை தன் நிழலைக் கொடுக்கும். இப்பாடல்களின் மூலம் குடும்பத்தில் கணவன் மனைவி குழந்தைகள் இவர்களிடத்தில் உள்ள அன்பு, பொறுப்பு, கடமை, உணர்வு மனிதர்களிடத்தில் மட்டும் அல்லாது விலங்குகளிடமும் உள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

**அன்றில் பறவையின் அன்பு**

அன்றில் பறவை ஒன்றை விட்டு ஒன்று பிரியாது சேர்ந்திருக்கும் இயல்புடையன, ஒன்று பிரியினும் உறங்காது வருந்திக் கொண்டிருக்கும் இயல்புடையன. ஆண் அன்றில் வரத் தாமதமானால் பெண் அன்றில் மூன்று முறை கூப்பிட்டபின் உயிர்விடும்.

> "மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
> துணை ஒன்று பிரியினும் துஞ்சா காண் என" (அகம்.50; 10-11)

அன்றில் பறவை ஒன்றோடு ஒன்று அன்பாகவும் இணக்கமாகவும் இருக்கும் என்பது உண்மையே

> "ஒன்றில் காலை அன்றில் போல" (நற்.124)

என்ற வரியில் ஒன்று இல்லாத போது மற்றொன்று வாழாது என்ற நற்றிணைப் பாடல் வரிகள் கூறுவது ஒப்பு நோக்கத்தக்கது. இரவில் இரை தேடச் செல்லும் அன்றில் தன் பேடையை எண்ணி ஏங்கி குரல் எழுப்பும் இதன் மூலம் அன்றிலின் பாச உணர்வு வெளிப்படுகிறது.

**பறவைகளின் நன்றியுணர்வு**

பறவைகளுக்குப் பாதுகாவலாக இருந்த ஆய் - எயினன் என்ற வள்ளல் போர்க்களத்தில் இருந்து போனான் அவன் பறவையினங்களை நன்கு வளர்த்துக் காப்பவன். அதனால் பறவைகளும் அன்பு காட்டின. பாழி என்ற போர்க்களத்தில் ஆய் எயினனைக் கொன்ற நேரம் நண்பகல், எயினது சிதைந்த உடம்பு போர்க்களத்தில் வெயிலிற் கிடப்பதைக் காணப்பெறாத பறவைகள் ஒன்று கூடித் தன் சிறகுகளை யெல்லாம் மேலே குடையாகப் பரப்பி உடலை வெயிற்படாமல் காத்தன. பகலிற் கண்தெரியாத கூகை தான் இந்த செய்ந்நன்றி நிகழ்ச்சியிற் கலந்து கொள்ள முடியவில்லையே என்று வருந்தியதாகக் கூறப்படுகிறது. பறவையினம் ஒரு மனிதனிடம் காட்டிய வியத்தகு அன்புச் செயலைப் பரணர்,

> "கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
> நெடுந்தேர் ஞிமிலியொடு பொழுதுகளம்
> காணிய செல்லாக் கூகை நாணி
> கடும்பகல் வழங்கா தாஅங்கு" (அகம்.148; 7-10)

அவ்வள்ளலின் மேனியில் வெயில் படாதவாறு பறவைகள் எல்லா சென்று நிழல் செய்து தன் நன்றியை தெரிவித்துக் கொண்டன.

## முடிவுரை

அகத்தினின்று எழுகின்ற இன்ப வாழ்வின் ஆர்வத் துடிதுடிப்புகளையும் எண்ணச் சுழல்களையும் அணி பெறக்காட்டுபவை அக இலக்கியங்கள். காதல் உணர்வு, இன்பம், அச்சம், கோபம், குறிப்பறிந்து நடத்தல் போன்ற பல்வேறு உணர்வுகள் அஃறிணை உயிர்களிடத்தில் மண்டிக்கிடப்பதையும் உணர்ந்து புலவர்கள் கற்பனையோடு கற்போர் உள்ளம் கொள்ளமாறு வாழ்வியல் நெறி முறைகளை நாம் கற்றுக் கொள்ளும் படியாக பாடியுள்ளனர்.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்